தமிழ் நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1969 செப்டம்பர் 13.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

* வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

Tube wells in Madras City.

**S.N.Q.* 2—DR. H. V. HANDE: Will the Hon'ble the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Madras City Corporation authorities have not been consulted in regard to the selection of sites for sinking tube-wells under the crash programme of this Government;

(*b*) whether there has been any complaint from the public and also from the Corporation authorities regarding the selection of site;

(*c*) whether the Government has any proposal to have a constant watch over the working of the tube-wells; and

(*d*) if so, the details therefor?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) கூடிய விரைவில் கவுன்சிலர்களையும் அந்தந்த இடங்களிலுள்ள பொது மக்களையும் கலந்தாலோசித்த பிறகு இந்த குழாய்க் கிணறுகள் வைக்கும் இடங்களை பொறியாளர்கள் தேர்ந்தெடுத்தார்கள்.

(இ) கவுன்சிலர்களிடமிருந்தும் பொது மக்களிடமிருந்தும் சில புகார்கள் வந்துள்ளன. இவைகளைப் பிரதமப் பொறியாளர்கள் கவனித்து ஆவன செய்து வருகிறார்கள்.

(உ) ஆம்.

(எ) சென்னை நகரம் ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவும் 24 வட்டங்கள் கொண்டுள்ளன. ஐந்து பிரதமப் பொறியாளர்களில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பிரிவில் அமைக்கப்பட்டுள்ள குழாய்க் கிணறுகளைப் பராமரிக்கும் பணி கொடுக்கப்பட்டுள்ளது.

* குறுகிய கால வினா 3—திரு. வி. எஸ். கோவிந்தராஜன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறட்சியால் பாதிக்கப்பட்ட சென்னை நகரில் எத்தனை குழாய்க் கிணறுகள் ஏற்படுத்தப்பட்டன?

(இ) அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

(உ) நாள் ஒன்றுக்கு எவ்வளவு காலன் தண்ணீர் கிடைக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) 11,116 குழாய்க்கிணறுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

(இ) 32.52 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

(உ) ஏறக்குறைய 10 மில்லியன் காலன் தண்ணீர் கிடைக்கிறது.

DR. H. V. HANDE : Sir, is it a fact that immediately after the filter-point tube wells were installed by the Public Works Department, the Mayor had complained in an interview to the Press, that that was not done in consultation with the Corporation and if so, whether the Government had taken any concrete steps to see that such grievances do not come forward? Also, are the Government aware of the fact that in several places where they have sunk these tube-wells, the people are not getting water? Also, will the Government be able to tell us the amount of money spent on the sinking of these tube-wells?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கெனவே நான் குறிப்பிட்ட பதிலிலே எவ்வளவு ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். 32.52 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. மாநகராட்சி மேயர் அப்படிப்பட்ட ஆட்சேபணை தெரிவித்ததாக இல்லை என்று அவர்களே பத்திரிகையில் செய்தி விட்டிருக்கிறார்கள். மேலும் இதுபற்றிய தகவல் ஒன்றும் இல்லை. தலைவரின் அனுமதியோடு ஒரு பத்திரிகைச் செய்தியைப் படிக்க விரும்புகிறேன். "சமீப மாதங்களில் சென்னை நகர மக்கள் பெரும் தண்ணீர் தட்டுப்பாட்டுக்கு உள்ளாகி உற்ற அவதி கொஞ்ச நஞ்சமல்ல. பருவ மழையை எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாற்றம்தான் அடைந்தார்கள். இதே நிலை நீடித்தால் வரும் அக்டோபர் மாதம், கொஞ்சம்கூட தண்ணீர் இல்லாத தாங்கமுடியாத நிலை ஏற்பட்டுவிடும் என்பதை உணர்ந்து தமிழக அரசாங்கம் சென்னை நகரம் முழுவதிலும் பேட்டைக்குப் பேட்டை, தெருவுக்குத் தெரு குழாய்க்கிணறுகளை ஏற்படுத்தி மக்களின் தண்ணீர் கஷ்டத்தைப் போக்க முயன்றிருப்பதைப் பாராட்டவேண்டும்". இது நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்களுடைய கருத்துக்களைப் பிரதிபலிக்கின்ற பத்திரிகையிலே வந்திருக்கிறது.

திரு. ப. மகாதேவன் : குழாய்கள் அமைப்பதற்கு காண்ட்ராக்ட் கொடுக்கும்போது, எந்த இடத்தில் தண்ணீர் இருக்கிறது என்று பார்த்து குழாய்கள் வைக்க வேண்டுமென்று இல்லாமல், குழாய் வைத்துவிட்டு, தண்ணீர் இருந்தால் முழுத்தொகை, தண்ணீர் இல்லாமல் இருந்தால் 25 சதவிகிதம் பணம் கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மையா ?

1969 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நம்முடைய டிபார்ட்மெண்டிலே உள்ள ஐந்து தலைமைப் பொறியர்களிடம் இந்த வேலை ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. காண்ட்ராக்ட் மூலம் செய்ய வில்லை, அவர்களே அரசாங்க அதிகாரிகள் மூலம் இந்த வேலையைச் செய்திருக்கிறார்கள்.

THIRU K. VINAYAKAM : Sir, the object of this Government is to sink 12,000 tube-wells but only about 10,000 tube-wells have so far been sunk. Is it not a fact that most of them are not working well at this moment and they are almost defunct for want of necessary accessories like pumps and small implements? For instance, in my own street there are four tube-wells and not one of them is working. I do not mind requesting the Hon. Minister to inspect them personally and see that they work properly.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பன்னிரண்டு ஆயிரம் குழாய்க் கிணறுகள் சென்னை மாநகரத்திலே அமைக்கவேண்டு மென்று திட்டம் தீட்டப்பட்டு, பத்து நாட்களுக்குள்ளாக இந்தக் காரியம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோன்று, மிகுந்த நடுநிலைமையுடன் இருப்ப தாகச் சொல்லப்படுகின்ற 'ஆனந்த விகடன்' பத்திரிகையும் பாராட்டித் தலையங்கம் எழுதியிருக்கிறது. 12,000 குழாய்க் கிணறுகளில் 11,000 குழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டிருக் கின்றன. எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவல்படி 500 அல்லது 600 இடங்களில்தான் குழாய்கள் சரிவர வேலைசெய்யவில்லை என்று புகார் வந்திருக்கிறது. மற்ற இடங்களில் நிச்சயமாகத் தண்ணீர் கிடைக்கிறது. தண்ணீர்த் தேவை நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று திருப்தியுடன் மக்களிடமிருந்து தகவல்கள் வந்த வண்ணம் இருக்கின்றன. 11,000 குழாய்க்கிணறுகள் நிரந்தரமாக இருக்க வேண்டுமென்று அமைக்கப்படவில்லை. தண்ணீர்த் தேவை தீர்ந்து போனதற்குப் பிறகு, குறிப்பிட்ட சில இடங்களில் மாத்திரம் குழாய்களை வைத்துவிட்டு, மிச்சம் உள்ளவற்றை கிராமப்புறங் களுக்கு எடுத்துச் செல்வதற்கு யோசித்துக் கொண்டிருக்கிறோம். இதனால்தான் மாநகராட்சியைக் கலக்காமல் அரசாங்கமே இதைச் செய்திருக்கிறது. இந்தப் பாராட்டிற்குரிய விஷயத்தை, ஏதோ ஒன்றிரண்டு இடங்களில் தண்ணீர் வரவில்லை என்பதற்காக, திரு. விநாயகம் அவர்கள் கண்ணீர் விட்டுக் கெடுடுக்கவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : காண்ட்ராக்ட் விடவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிற பெரிய அதிகாரிகள் சப்-காண்ட்ராக்ட் விட்டிருக்கிறார்களா ? அப்படியென்றால் எந்த அடிப்படையிலே விட்டிருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : காண்ட்ராக்ட் விட்டால்தான் சப்-காண்ட்ராக்ட் வரும். எனவே, இந்தப் பிரச் சினைக்கு இடம் இல்லை.

Dr. H. V. HANDE : Sir, while it is a fact that the achievement made by the Government is really praiseworthy—in spite of our habit of criticising them I can vouchsafe that what they have done is wonderful—I must point out that only 85 per cent of the tube-wells are working and 15 per cent of them are not working well. So, I would request the Hon. Minister to set up a Flying Squad comprising a few engineers and mechanics to go round the various places and set right immediately the pumps which are not working so that red tapism can be avoided. Having spent so much money, it would be a wise thing if such a Flying Squad is established to see that they are working properly ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : டாக்டர் ஹாண்டே அவர்கள், குழாய்கள் 85 சத விதம் வேலை செய்வதாக ஒத்துக்கொண்டார்கள். அதற்கு நன்றி. 'Fifteen' என்று ஆங்கிலத்தில் சொன்னதை "50 சத விதம்" என்று பத்திரிகையில் போட்டு விடக் கூடாது. ஆகவே, "85 சத விதம்" என்பதைத் திரும்பவும் சொன்னேன். அவர்கள் குறிப்பிடுவதைப் போல், ஆங்காங்கு இந்தக் குழாய்கள் வேலை செய்கின்றனவா என்று பார்ப்பதற்கு அப்படிப்பட்ட குழுக்களை நியமிப்பது நல்ல யோசனைதான். அந்தக் குழாய்கள் வேலை செய்கின்றனவா என்று பார்ப்பதோடு, அந்தக் குழாய்களை யாரும் எடுத்துச் செல்லாமல் கண்காணிக்கும் பொறுப்பையும் அந்தக் குழுவினிடம் கொடுக்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : அரசாங்கம் இதுமாதிரி குழாய்க் கிணறுகள் அமைக்கவேண்டும் என்று முடிவு செய்தவுடன் சென்னையிலுள்ள வியாபாரிகள் குழாய்களின் விலையைத் திடீரென்று உயர்த்திவிட்டார்கள் என்பதும், அப்படி உயர்ந்த விலையில் குழாய்கள் வாங்கப்பட்டிருக்கின்றன என்பதும் உண்மையா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதற்கென்று அவசரச் சட்டம் போட்டு முடிவு எடுக்க முடியாது.

திரு. சுரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : சென்னை மாநகரில் இந்தத் தண்ணீர்த் தட்டுப்பாட்டை ஓரளவு நிவர்த்தி செய்ததைப் பாராட்டுகிறேன். இருப்பினுங்கூட, சட்டசபை மெம்பர்கள் விடுதியிலே போடப்பட்ட குழாயிலிருந்து தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது. அதைக் குடிக்கவே முடியவில்லை. மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதை நிவர்த்திக்க உடனடியாக ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நல்ல வேளையாக சட்டசபை இன்றோடு முடிவடைகிறது. தண்ணீர்க் கஷ்டம் தீருகிற வரையில் சட்டசபை உறுப்பினர்கள் அதிகமாக சென்னைக்கு வராமலிருப்பது நல்லது.